மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதற்கும் இதற்கும் வித்தியாசம் இருக்கிறது. அணை கட்டுவது என்றால் மத்திய அரசின் அனுமதி இல்லாமலேயே கட்டிவிடலாம். ஆனால் தொழில்களைத் தொடங்குவதற்கு வெளிநாட்டு உதவி, வெளிநாட்டு மூலப்பொருட்கள், வெளிநாட்டுச் செலவாணி தேவைப்படுவதால் மத்திய அரசின் அனுமதி இல்லாமல் முடியாது.

திரு. என். கே. பழனிசாமி: சார், 1956-ம் ஆண்டு இண்டஸ்ட்ரீஸ் ரெசல்யூஷனில் இன்னின்ன தொழில்களை மாநில அரசாங்கமே தொடங்கலாம் இன்னின்ன தொழில்களை மத்திய அரசின் அனுமதியோடுதான் தொடங்கலாம் என்றிருக்கிறது. நாம் காத்துக்கொண்டிருக்கக்கூடிய தொழில் விண்ணப்பங்கள் எல்லாம் 1956-ம் ரெசல்யூஷனுக்கு உட்பட்டதா? புறம்பானதா? உட்பட்டது என்றால் தீவிர நடவடிக்கை எடுக்காததற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்தத் தீர்மானம் ஏட்டிலே இருக்கிறது. அந்தத் தீர்மானத்தை நாங்கள் குறிப்பிட்டு, அதன் அடிப்படையிலேதான் அவர்களை அனுமதி கேட்டு, அவர்கள் அனுமதி கொடுத்த பின்னால் இப்போது மறுபரிசீலனை செய்கிறார்கள்; தயக்கம் காட்டுகிறார்கள்.

Employment opportunities for Harijans in Private Sector.

* 520 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to take steps for the employment of Harijans in the private sector; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

THIRU N. DENNIS: Sir, may I know whether any statistics have been worked out about the percentage of Harijans employed in private sector?

THE HON. THIRU S. MADHAVAN: No, Sir.

1973 நவம்பர் 30]

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, தனியார் துறைக்கு அரசாங்கம் நிறைய பணம் கடன் தருகிறது. ஆகவே, இப்படிப்பட்ட நிறுவனங்களில் இதுபோன்ற காரியங்களை அரசாங்கம் வலியுறுத்துமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இல்லை.

திரு. ந. சோமசுந்தரம் : தலைவரவர்களே, தனியார் துறையில் மட்டுமின்றி, அரசு நடத்தும் கூட்டுறவுத் துறை, போக்குவரத்துத் துறை, மின்சார வாரியம், மாநகராட்சி, குடிசைமாற்றுவாரியம் போன்ற நிறுவனங்களிலும் அரிசனங்களுக்கு ஒரு குறிப்பிட்ட விகிதாச்சாரம் இடமளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசுத் துறைகளிலே அரிசனங்களுக்கு வாய்ப்பளிக்க தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, பொதுவாக அரிசனங்களுக்கு இல்லாவிட்டாலும், தனியார் துறையிலே இருக்கின்ற முதலாளிகள் ஆள் எடுக்கும்போது, எம்பிளாய்மென்ட் எக்சேஞ்சை அவர்கள் கேட்பதில்லை. சிம்சன் போன்ற பெரிய கம்பெனிகளில் அங்கே பணியாற்றுகின்றவர்களுடைய பிள்ளைகள், உறவினர்களுக்குத்தான் வேலை கொடுப்பது என்று வகுத்திருக்கிறார்கள். இதன்மூலம் எம்பிளாய்மென்ட் எக்சேஞ்சின் நோக்கத்தைக்கூட அவர்கள் புரிந்துகொள்ளவில்லை என்று தெரிகிறது. ஆகவே, இனிமேலாவது, தனியார் நிறுவனங்களில் ஆள் எடுக்கும்போது எம்பிளாய்மென்ட் எக்சேஞ்ச் மூலமாகத்தான் எடுக்கவேண்டுமென்று அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பிள்ளைகளுக்கு, உறவினர்களுக்கு வேலை கொடுப்பது என்ற ஒப்பந்தம் தங்களுக்கு வேண்டுமென்ற கோரிக்கைக்காகவே தொழிலாளர்கள் போராட்டங்களே கூட நடத்துகிறார்கள். ஆகவே, அதில் தலையிட முடியாது.